# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/CPT - அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)

E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு,
சேப்பாக்கம்
சென்னை - 600 005.
போன் : 2854 8529
2851 5038
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| கே. விஜயன் | எஸ்.எஸ். சுப்பிரமணியன் | டி. கோவிந்தராஜு |


பெறுநர்,

25.08.2011

தலைவர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் வினியோகக்கழகம்,
144. அண்ணாசாலை,
சென்னை-2.

அய்யா,

பொருள் : பணியமைப்பு - மின்வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளம் - வாரியம் பிறப்பித்த உத்திரவில் மாற்றங்களும் தகுந்த வழிகாட்டுதலும் வழங்க கோருவது சம்மந்தமாக ....

பார்வை : 1) Per. FB.TANGEDCO . Proceedings NO.11 ADM Br. dt 02.08.2011
2) சங்க கடித நாள் 08.08.2011

•••••••

தமிழக மின்சார வாரியத்தில் பணியாற்றும் பகுதி நேர ஊழியர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கான சம்பளத்தை 04.04.2003 முதல் அளிக்க வேண்டுமென உச்ச நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதில் வாரியம் காலதாமத போக்கை கடைபிடித்த காரணத்தால் சென்னை உயர்நீதிமன்றத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்து வழக்கு விசாரனைக்கு வந்த பின்னர் வாரிய தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி உச்சநீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துகிறோம் என்று வாக்குறுதி அளித்தது.

தமிழ்நாடு மின்சார வாரியம் நீதிமன்றத்தில் அளித்த வாக்குறுதிக்கு பின்னர் பார்வை 1 ல் கண்ட வாரிய உத்திரவின் அடிப்படையில் 5646 பகுதி நேர பதவிகளை புதியதாக அனுமதித்து உத்திரவு பிறப்பித்ததே தவிர அந்த உத்திரவில் பகுதி நேர ஊழியர்களாக உறுவாக்கப்பட்ட பதவிகளில் இந்த ஊழியர்களை பொருத்தி நிரந்தரத்திற்கான உத்திரவு வழங்குவது சம்மந்தமாகவோ, அவர்களுக்கு வாரிய உத்திரவில் குறிப்பிட்டுள்ள ரூ 600 - 10 - 700 - 20 - 110 இந்த ஊதிய விகிதத்தில் பொருத்துவது சம்மந்தமாகவோ, அவர்களுக்கு 1.4.2005 இல் இருந்து சிறப்பு ஊதியம் கொடுத்தது சம்மந்தமாகவோ, 1.9.2006 முதல் அவர்களுடைய ஊதிய விகிதம் 1300 -20-1500-25-2000 என்று மாற்றியமைக்கப்பட்டது சம்மந்தமாகவோ இவைகளின் அடிப்படையில் வருகின்ற நிலுவைத்தொகை எந்த தேதியில் வழங்கப்படும் என்பன போன்ற விபரங்களோ, பார்வையில் கண்ட வாரிய உத்திரவில் குறிப்பிடாத காரணத்தால் நீதிமன்ற தீர்ப்பு மின்வாரியத்தில் அமுல்படுத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் தலைமை அலுவலகத்திலோ, சம்பளத்தை வழங்கும் மேற்பார்வை மின் பொறியாளர் அலுவலகத்திலோ எடுக்கப்படாத நிலை உள்ளது.

உயர்நீதி மன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு வரும்போதெல்லாம் தமிழ்நாடு மின்சார வாரிய தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி கால அவகாசம் கேட்டுப்பெறுகிற நிலைதான் உள்ளது.

இந்நிலையில் மின்வாரிய தலைமை அலுவலகத்திலிருந்து ஒரு தெளிவான வாரிய உத்திரவோ, அல்லது குறிப்பாணையோ வட்ட மேற்பார்வை மின் பொறியாளர்களுக்கு வழங்கினால் தான் நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்தும் வகையில் இந்த பிரச்சனை முடிவுக்கு வரும் என்பதை குறிப்பிட விரும்புகின்றோம்.

**வாரியம் வழங்கும் விளக்க குறிப்பாணையில்,**

1. வாரிய உத்தரவு 11 இல் சில மாற்றங்களை கோரி நாங்கள் கொடுத்த 8.8.2011 கடிதத்தில் சொல்லப்பட்ட விதி மாற்றங்களை செய்ய வேண்டும்.

2. தமிழக அரசில் பணியாற்றும் சத்துணவு ஊழியர்களுக்கு 1.9.2006 முதல் அவர்களின் ஊதியம் ரூ 1300-20-1500-25-2000 என்று பொருத்தியதை மின்வாரிய பகுதிநேர ஊழியர்களுக்கும் பொருத்தும் விதியை சேர்க்க வேண்டும்.

3. சத்துணவு ஊழியர்களுக்கு 1.4.2005 முதல் தனி ஊதியம் (Personal Pay) ரூ200 ஐ வழங்கியதை போல மின்வாரிய பகுதிநேர ஊழியர்களுக்கும் வழங்கும் வகையில் விதிகள் சேர்க்கவேண்டும்.

4. சத்துணவு ஊழியர்களுக்கு மருத்துவப்படி, வீட்டுவாடகைப்படி, சலவைப்படி, போன்றவைகள் சேர்த்து மாதம் ரூ 360/ வழங்கப்படுகிறது, இவைகளையும் மின்வாரிய பகுதிநேர ஊழியர்களுக்கு வழங்க வழிசெய்யும் விதிகளை சேர்க்கப்படவேண்டும்.

5. பகுதி நேர ஊழியர்களுக்கு இந்த ஊதிய விகிதங்களை அமுல்படுத்துவதினால் ஏற்படும் நிலுவைத்தொகையை தமிழ்நாடு முழுவதும் ஒரே தேதியை நிர்ணையித்து வழங்குவதற்கான விதியையும் சேர்க்கப்படவேண்டும்.

பகுதிநேர ஊழியர்களுக்கு உச்சநீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் சம்பள பொருத்தம் சம்மந்தமாக விபரபட்டியல் ஒன்றும் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

எனவே தலைவர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் வினியோகக்கழகம், அவர்கள் இக்கடிதத்தின் மீது தனி கவனம் செலுத்தி மேற்கூறிய விதிகளை வாரிய உத்தரவாக வழங்கி பகுதிநேர ஊழியர்களுக்கு சம்பள பொருத்தமும், நிலுவைத்தொகையும் அளித்து நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்தி நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச்செயலாளர்.